**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.55/2026**

எ.ம.சா.2 சீனிவாசன் த/பெ சின்னஎல்லன் நாள் : 09.07.2026

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். ம.சா.ஆ.11 ல் இறந்த ரமணா என்பவருக்கு சீதாலட்சுமி என்பவர் மட்டும் தான் வாரிசு என்று தாக்கல் செய்திருப்பதை எவ்வாறு தவறானது என்று கூறுகிறேன் என்றால் இறந்த ரமணாவிற்கு ஆதார் அட்டை, ரேசன் அட்டை இல்லை என்றும், முதல் தகவல் அறிக்கையில் பழனியில் விலாசம் உள்ளது, ஆனால் வாரிசு சான்றிதழ் திருப்பத்தூரில் பெறப்பட்டுள்ளது என்பது எங்களது விசாரணையில் தெரியவந்ததால் வாரிசு சான்றிதழ் தவறானது என்று நான் கூறுகிறேன். ரமணாவிற்கு திருமணமாகிவிட்டது என்றும், அவரது குடும்பம் பழனியில் வசித்து வருகிறது என்றும், நான் கூறுவதை நிரூபிக்க ஆவணம் ஏதும் இல்லை. ரமணாவிற்கு ரமேஷ்பாபு, ரவி சகோதரர்கள் என்றால் இவர்கள் உடன் பிறந்தவர்கள் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ. 9 ல் வழங்கப்பட்டுள்ள அறிக்கை தவறானது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.6 பொய்யானது என்றால் சரியல்ல. விபத்து கார் ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் வேகத்தால் ஏற்பட்டது என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

TN 01 AY 3096 என்ற கார் எங்கள் நிறுவனத்தில் விபத்து தேதியில் காப்பீடு செய்யப்பட்டு இருப்பதால் மூன்றாம் தரப்பினரான ரமணாவின் வாரிசுகளுக்கு எங்கள் நிறுவனம் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஓம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.